# திருவள்ளூர் நகராட்சி

## 2021 – 2022–ம் ஆண்டு

## நிர்வாக அறிக்கை



# திருவள்ளூர் நகராட்சி
# 2021–2022 –ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

1. **அமைப்பும் மேலாட்சியும்:**

அ) திருவள்ளூர் நகராட்சி 1948ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியன்று நிறுவப்பட்டது. அன்று முதல் 8.05.1983 வரை மூன்றாம் நிலை நகராட்சியாகவும் 9.05.1983ம் தேதிய ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண் 651–ன்படி 9.05.1983ம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அராசானை எண்.238, நாள்.02.12.2008 லிருந்து முதல் நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 10.65 சதுர கிலோ மீட்டராக அறிக்கையாண்டில் (1.04.2021 முதல் 31.03.2022வரை) இருந்து வருகிறது.

ஆ) நகராட்சியின் தற்போதைய பரப்பரளவின் எல்லையில் ஏதும் மாற்றம் இல்லை. ஐந்து வருவாய் கிராமங்களை (அதாவது பெரும்பாக்கம், திருவள்ளூர், ஐவேலி அகரம், புங்கத்தூர், பெரியகுப்பம்) தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நகரில் 2011–ம் ஆண்டு ஜனத் தொகை கணக்கின்படி மக்கள் தொகை 56074 ஆகும். இந்நகரில் 2001–ம் ஆண்டு ஜனத் தொகை கணக்கின்படி மக்கள் தொகை 45557 ஆகும்.

இ) தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறையின் 04.12.1990 தேசிய அரசு ஆணை எண்.1017ல் இந்நகராட்சியின் வார்டுகள் 20 லிருந்து 27 ஆக உயர்த்தி உத்திரவு அளிக்கப்பட்டுள்ளது.

உ) அறிக்கையாண்டில் 01.04.2021 முதல் 15.10.2021 வரை திரு.ப.சந்தானம் ஆணையர் பதவி வகித்துள்ளார். 15.102021, பிற்பகல் முதல் திரு.சி.வி.ரவிசந்திரன் அவர்கள் அறிக்கை ஆண்டு முழுவதும் ஆணையராக பதவி வகிக்கிறார். முந்தைய நகரமன்றத்திற்கு திரு.அ.பாஸ்கரன் அவர்கள் நகர மன்ற தலைவராகவும் திரு.என்.ராதாகிருஷ்ணன் அவர்கள் நகர்மன்ற துணைத்தலைவராகவும் பொறுபேற்றிருந்தனர். திரு.அ.பாஸ்கரன் பதவி விலகிய பின் திரு.என்.ராதாகிருஷ்ணன் அவர்கள் நகர்மன்ற தலைவராகவும் பொறுபேற்றிருந்தார்.

ஊ) 19.02.2022 அன்று நடைபெற்ற நகர்மன்ற உறுப்பினர்களுக்கு உண்டான தேர்தல் நடத்தப்பட்டு அதற்கான வாக்குகள் 22.02.2022 அன்று எண்ணப்பட்டு கீழ்கண்டுள்ள பட்டியலில் உள்ளவாறு நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 04.03.2022 அன்று நடைப்பெற்ற நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலில் வார்டு எண்.2 நகர்மன்ற உறுப்பினரான திருமதி.பா.உதயமலர் என்பவரை நகர்மன்ற தலைவராகவும் மற்றும் வார்டு எண்.27 நகர்மன்ற உறுப்பினரான திரு.எஸ்.ரவிசந்திரன் என்பவரை துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.பா.உதயமலர் அவர்கள் | நகர்மன்ற தலைவர் (04.03.22 முதல்) வார்டு எண்.2 |
| 2 | திருமதி.வி.வசந்தி அவர்கள் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.1 (வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர்) |
| 3 | திருமதி.வி.சுமித்ரா அவர்கள் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.3 |
| 4 | திருமதி.பி.நீலாவதி அவர்கள் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.4 |
| 5 | திருமதி.ஆர்.அம்பிகா அவர்கள் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.5 |
| 6 | திரு.கே.பிரபாகரன் அவர்கள் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.6 (வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர்) |
| 7 | திரு.ஆர்.பிரபு | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.7 |
| 8 | திருமதி.ஜி.சாந்தி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.8 |
| 9 | திரு.டி.அயூப் அலி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.9 |
| 10 | திரு.டி.கே.பாபு | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.10 |

| | | |
|---|---|---|
| | | (ஒப்பந்தக்குழு உறுப்பினர்) |
| 11 | திரு.வி.இ.ஜான் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.11 |
| 12 | திரு.ஜி.ஆர்.ராஜ்குமார் (எ) தாமஸ் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.12 |
| 13 | திருமதி.எஸ்.பத்மாவதி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.13 (வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர்) |
| 14 | திருமதி.பி.அருணா | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.14 |
| 15 | திரு.டி.செல்வகுமரன் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.15 |
| 16 | திருமதி.பி.இந்திரா | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.16 (வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர்) |
| 17 | திரு.வி.சீனிவாசன் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.17 |
| 18 | திருமதி.எ.எஸ்.ஹேமலதா | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.18 |
| 19 | திரு.ஜி.கந்தசாமி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.19 |
| 20 | திரு.ஆர்.விஜயகுமார் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.20 (பணி நியமனக் குழு உறுப்பினர்) |
| 21 | திருமதி.எம்.கமலி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.21 |
| 22 | திருமதி.வி.சித்ரா | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.22 |
| 23 | திருமதி.எ.ஆனந்தி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.23 |
| 24 | திரு.எல்.செந்தில் குமார் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.24 |
| 25 | திருமதி.கே.விஜயலஷ்மி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.25 |
| 26 | திருமதி.எஸ்.தனலட்சுமி | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.26 |
| 27 | திரு.எஸ்.ரவிசந்திரன் | நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண்.27 (நகர்மன்ற துணைத் தலைவர்) |

மேற்படி 19.02.2022 ஆம் தேதியில் நடைபெற்ற தேர்தலில் 1 முதல் 27 வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் 02.03.2022–ம் தேதியன்று தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களால் பதவிப்பிரமாணம் செய்து வைத்து அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

பிறகு இந்நகராட்சியின் நகர்மன்றத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தல், தேர்தல் நடத்தும் அலுவலரால் 04.03.2022–ம் தேதியன்று முற்பகல் 09.30 மணிக்கு நடத்தப்பெற்றது. இத்தேர்தலில் நகர்மன்ற தலைவர் பதவிக்கு 2–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திருமதி.பா.உதயமலர்** என்பவர் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு இந்நகராட்சியின் நகர்மன்ற துணைத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தல், தேர்தல் நடத்தும் அலுவலரால் 04.03.2022–ம் தேதியன்று பிற்பகல் 02.30 மணிக்கு நடத்தப்பெற்றது. இத்தேர்தலில் நகர்மன்ற துணைத் தலைவர் பதவிக்கு 27–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திரு.எஸ்.ரவிசந்திரன்** அவர்களும் 7–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் **திரு.R.பிரபு** அவர்களும், மனுதாக்கல் செய்து போட்டியிட்டதால், தேர்தல் நடத்தும் அலுவலரால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டதில், **திரு.எஸ்.ரவிசந்திரன்** அவர்கள் வெற்றிப்பெற்று நகர்மன்ற துணை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டது. அன்றே நகர்மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட **திருமதி.பா.உதயமலர்** மற்றும் நகர்மன்ற துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட **திரு.எஸ்.ரவிசந்திரன்** அவர்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவரால் பதவிபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத் தலைவர் அவர்கள் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டு பதவி ஏற்றார்கள்.

**2. அலுவலர்கள்**

அ. ஆணையர்

திரு.ப.சந்தானம், ஆணையர் அவர்கள் 01.04.2021 முதல் 15.10.2021 பிற்பகல் வரை ஆணையாளராக பதவி வகித்துள்ளார். 15.10.2021 பிற்பகல் முதல் திரு.சி.வி.ரவிசந்திரன் அவர்கள் ஆணையராக 31.01.2022 வரை பதவி வகித்துள்ளார். மேலாளர் திரு.எம்.நாகூர் மீரான் ஒலி, 01.02.2022 முதல் அறிக்கை ஆண்டு முழுவதும் ஆணையர்(பொ) பதவி வகித்துள்ளார்.

## ஆ. மேலாளர்

திரு.எம். நகாகூர் மீரான் ஒலி, மேலாளர் 01.04.2021 முதல் அறிக்கை ஆண்டு முழுவதும் மேலாளராக பணியாற்றி உள்ளார். 01.02.2022 முதல் அறிக்கை ஆண்டு முழுவதும் ஆணையாளர்(பொ) பதவி வகித்துள்ளார்.

## 3. தேர்தல்கள்

19.02.2022 அன்று தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் 27 வார்டுகளுக்கும் புதிய நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 02.03.2022 முதல் செயலாற்றி வருகிறார்கள்.

## 4. கூட்டங்கள்

அறிக்கையாண்டில் 31.03.2022 வரையில் நடைபெற்ற கூட்ட விவரம்:–

| வ.எண் | விபரம் | கூட்டத்தின் எண்ணிக்கை | பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சாதாரணக் கூட்டம் | 12 | 308 |
| 2 | அவசர கூட்டம் | 1 | 1 |
| 3 | சிறப்புக் கூட்டம் | – | – |
| | மொத்தம் | 13 | 309 |

கூட்டத்திற்கு வைக்கப்பட்ட பொருட்கள் மீது அவ்வப்போது தாமதமின்றி முடிவெடுக்கப்பட்டது.

1. ஆண்டு ஆரம்பத்தில் நிலுவையிலிருந்த பொருட்களின் எண்ணிக்கை – இல்லை
2. அறிக்கையாண்டில் வைக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை – 309
3. முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை – 309
4. ஆண்டு இறுதியில் நிலுவையாக உள்ள பொருட்களின் எண்ணிக்கை – இல்லை

## 5. குழுக்கள்

1) 04.03.2022–ந் தேதியில் நடைபெற்ற நகர்மன்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர் அவர்கள், கீழ்க்குறிப்பிட்ட குழுக்களின் தலைவராக செயல்பட்டு வருகின்றார்.

அ) 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகரராட்சிகளின் சட்டம் பிரிவு 68–ன் கீழ் நிறுவப்பட்ட ஒப்பந்தக்குழு.

ஆ) 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 75–ன் கீழ் நிறுவப்பட்ட நியமனக்குழு.

கீழ்க்கண்டவாறு குழு உறுப்பினர்களாக 25.10.2011 முதல் தேர்வு செய்யப்பட்டு 24.10.2016 வரை பணியாற்றி வந்தனர்.

ஒப்பந்தக்குழு உறுப்பினர் – திரு.T.K.பாபு, அவர்கள்,
நகர்மன்ற உறுப்பினர் (11–வது வார்டு)

நியமனக்குழு உறுப்பினர் – திரு.R.விஜயகுமார், அவர்கள்,
நகர்மன்ற உறுப்பினர் (20–வது வார்டு)

வரி மேல்முறையீட்டுக் குழு உறுப்பினர்கள்:–

1. திருமதி.வி.வசந்தி அவர்கள் – நகர்மன்ற உறுப்பினர் (1–வது வார்டு)
2. திரு.கே.பிரபாகரன் அவர்கள் – நகர்மன்ற உறுப்பினர் (6–வது வார்டு)
3. திருமதி.எஸ்.பத்மாவதி அவர்கள் – நகர்மன்ற உறுப்பினர் (13–வது வார்டு)

4. திருமதி.பி.இந்திரா அவர்கள் – நகர்மன்ற உறுப்பினர் (16–வது வார்டு)

<u>அறிக்கையாண்டில் கூடிய குழுக் கூட்டங்களில் விவரம்:–</u>

| வ.எண் | குழுவின் பெயர் | கூட்டங்கள் | வைக்கப்பட்ட பொருட்கள் | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|---|
| 1 | ஒப்பந்தக்குழு | அறிக்கையாண்டில் 01.04.2021 முதல் 31.03.2022 வரை மேற்படி குழுக்கள் ஏதும் செயல்படவில்லை. | | |
| 2 | நியமனக்குழு | | | |
| 3 | வரிமேல்முறையீட்டுக்குழு | | | |

22.09.1938–ம் தேதிய உள்ளாட்சி துறையின் 3806 எண் அரசு ஆணையின்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 3வது அட்டவணையில் சட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டு மன்ற கூட்டங்கள் நடத்தப்பட்டன.

<u>6. மேலாளுகை:–</u>

1. அலுவலக சிப்பந்திகள் ஊதியமும் வசூல் சிப்பந்திகள் ஊதியமும் மொத்த சாதாரண செலவு ரூ.790.99 வேலைகளுக்காக ரூ.3876570/– செலவு செய்யப்பட்டது இந்த இனத்தின் கடந்த ஆண்டு ரூ.497456/–

3. 1942–43–ம் ஆண்டின் விதிகள் நில அளவை மட்டும் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது. நகரம் முழுவதும் நில அளவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் நில நகர ஆய்வர் ஒருவரும் சங்கிலியாட்கள் இருவரும் பணியாற்றி வந்தார்கள். விரிவாக நகர அளவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர அளவு வரைகடப்பு கட்டணங்கள் மூலம் அறிக்கையாண்டில் வரவு ஒன்றும் இல்லை. சென்ற ஆண்டும் வரவு இல்லை.

1931–ம் ஆண்டின் உந்து வண்டிகள் சட்டத்தின் கீழ் 2010– 2011 ஆண்டு வண்டி வாகனாதிகள் மூலம் வருவாய் விவரங்கள் கீழ் வருமாறு.

1. வண்டி வாகனாதி வரி – இல்லை
2. கட்டை வண்டி மீதான வரி – இலலை
3. பேருந்து வண்டிகள் சட்டத்தில் கீழ் வருமானத்திற்கு ஈடு – இல்லை
4. சுங்க சாவடிகள் உந்துவண்டிகள் சட்டத்தில் கீழ் வருமானத்திற்கு ஈடு – இல்லை

<u>7. போக்குவரத்து</u>

<u>1. சிப்பந்திகள்</u>

கீழ்க்கண்ட நபர்கள் அறிக்கை ஆண்டில் பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர்களாக பணிபுரிந்தனர். இவர்களைத் தவிர சாலை பராமரிப்பு பணியாளர்கள் 2 பேர் பணியாற்றி வந்தனர்.

நகராட்சி பொறியாளர்

1) திரு.D.நாகராஜன் 01.04.2022. முதல் அறிக்கை ஆண்டு முழுவதும் பொறியாளராக பணிபுரிந்துவருகிறார்.

<u>பொதுப்பணி மேற்பார்வையாளர்</u>

1) திரு.ந.அமுதன் அவர்கள் 18.10.2021 வரை பொதுப் பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்துள்ளார். 18.10.2021 முதல் V.சீனிவாசன், பொதுப்பணி மேற்பார்வையாளர், அறிக்கை ஆண்டு முழுவதும் பணிபுரிந்து வருகிறார். பொறியாளர் பிரிவில் நடைபெறும் சாலைப்பணிகள் கட்டிடப் பணிகளைப் பார்வையிடவும் மதிப்பீடுகள் தயார் செய்யவும், பொதுப்பணி மேற்பார்வையாளரைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2. சாலையும், பாலங்கள் தோணித்துறை மற்றும் கட்டிடங்கள்

அ. சாலைகள், வீதிகளும் பாகுபாடும் தேசிய நெடுஞ்சாலைகள் இல்லை

### ஆ. அரசு நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலைகள்

1. திருமழிசை – சத்தியவேடு சாலை
2. சென்னை– திருத்தணி சாலை
3. திருவள்ளூர்–செங்குன்றம் சாலை

மேற்படி 3 சாலைகளும் தமிழக அரசு பெருவழித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகர்மன்ற எல்லைக்குள் இருக்கும் மேற்படி சாலைகளின் நீளம் 6.40 கிலோ மீட்டர் ஆகும். இவையாவும் தூசியில்லா சாலைகளாகும்.

### இ. இதர சாலைகளும் வீதிகளும்

இந்நகர்மன்றத்தால் பராமரிக்கப்படும் சாலைகளில் மொத்த நீளம் கீழ்க்கண்ட விவரப்படி 62.556 கிலோ மீட்டராக இருந்தது.

| வ.எண் | சாலையின் விவரம் | சென்ற ஆண்டு 2020 – 2021 | அறிக்கையாண்டில் 2021 – 2022 |
|---|---|---|---|
| 1 | தார் சாலை | 41.650 | 70.775 |
| 2 | சிமெண்ட் சாலை | 16.850 | 32.021 |
| 3 | ஜல்லி சாலை | --- | --- |
| 4 | கிராவல் சாலை | 4.056 | --- |
| | மொத்தம் | 62.556 | 102.796 |

5. ஒப்பந்ததாரர்களைக் கொண்டு சாலைகள் அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு வந்தது. சரளை கற்கள் மற்றும் நீலநிற கருங்கல் 42 கி.மீ தூரத்தில் உள்ள சிக்கராயபுரம் இருந்தும் கொண்டு வரப்படுகிறது.

## 8. பாலங்கள், அணைகள் மற்றும் வாராவதிகள்

அ. அறிக்கையாண்டில் 19 சிறுபாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஆ. தோணித்துறைகள் ஏதும் இல்லை

## 9. தங்கும் இடங்கள்

வார்டு எண்.27–ல் வரதராஜ நகரில் NULM திட்டத்தின் கீழ் வீடற்றவர்களுக்கு இரவு தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

## 10. பொறிகளும், கருவிகளும்

நகராட்சிக்கு சொந்தமாக மண் அள்ளும் எந்திரம் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 11. விளக்கு வசதிகள்

அறிக்கையாண்டில் பராமரிக்கப்பட்டு வரும் விளக்குகளின் எண்ணிக்கை 3553 ஆகும். அவைகளின் விவரம் வருமாறு.

| வ.எண் | விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சாதாரண விளக்குகள் | --- |
| 2 | குழல் விளக்குகள் | 1711 |
| 3 | CFL | 643 |

| | | |
|---|---|---|
| 4 | சோடியம் விளக்குகள் | 530 |
| 5 | உயர் கோபுர மின் விளக்குகள் | 158 |
| 6 | நடுவன் விளக்கு 4x24 | 170 |
| 7 | சொற் விளக்கு | 369 |
| | மொத்தம் | 3581 |

நகர்மன்ற எல்லையில் அநேகமாக எல்லா இடங்களிலும் குழல் விளக்குகள் போடப்பட்டுள்ளன.

<u>குடிநீர் விநியோகம்</u>

நகராட்சியின் பராமரிப்பிலிருக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நீரேற்று நிலையங்களிலிருந்து குடிநீர் தொடர்ந்து நகரத்திற்கு வழங்கப்பட்டது.

1. கூவம் ஆற்றுப்படுகையிலுள்ள பெரியகுப்பம் தலைமை நீரேற்று நிலையம்
2. எடப்பாளையம் நீரேற்று நிலையம்
3. டோல்கேட் துணை நீரேற்று நிலையம்
4. வெங்கடாசலபதி சாலை போலீஸ் லைன் எதிரில் உள்ள துணை நீரேற்று நிலையம்
5. சி.வி.நாயுடு சாலை துணை நீரேற்று நிலையம்
6. இந்திரா நகரிலுள்ள சேலை ரோட்டில் உள்ள துணை நீரேற்று நிலையம்
7. தாவுத்கான்பேட்டை நீரேற்று நிலையம்
8. பெரும்பாக்கம் காலனி நீரேற்று நிலையம்
9. புங்கத்தூர் நீரேற்று நிலையம்
10. மோதிலால் தெருவிலுள்ள நீரேற்று நிலையம்
11. வள்ளுவர்புரம் நீரேற்று நிலையம்
12. கொசஸ்தலை ஆற்று படுகையில் வெள்ளியூரில் தலைமை நீரேற்றும் நிலையம்.
13. அம்சா நகர் ஏரிக்கரை
14. கிழக்கு குளக்கரை தெரு நீரேற்று நிலையம்
15. புங்கத்தூர் ஏரிக்கதை நீரேற்று நிலையம்
16. ICME பின்புறம் நீர்ரேற்று நிலையம்

இவைகளிலிருந்து நாளொன்றிற்கு சுமார் 56.40 லட்சம் லிட்டர் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. நீரேற்று நிலையங்கள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் பகிர்மான மொத்த நீளம் 61.00 கிலோ மீட்டராகும்.

அறிக்கையாண்டில் இறுதிவரை 202 ஒற்றை குழாய்களும் 23 இரட்டை குழாய்களும் மேலும் பொன் விழா ஆண்டு கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 105 ஒற்றை குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் இறுதிவரை வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு 5532 மீட்டர் கட்டண விகிதத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் 10 கொடுக்கப்பட்டுள்ளது.

<u>12. துவக்க கல்வி</u>

இந்நகராட்சியால் 4 நடுநிலைப் பள்ளிகளும், 2 மேல்நிலைப் பள்ளி, 4 ஆரம்ப பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வந்தது. 1.04.1990 முதல் நகரப்பள்ளி பணியாளர் தொகுதி நிர்வாகத்தை அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது. பள்ளி கட்டிடம் மட்டும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>13. இடவசதியும், கருவிகளும்</u>

7 பள்ளிகள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்திலும், 1 பள்ளி வாடகை கட்டிடத்திலும் இயங்கி வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் வாடகை கட்டிடத்தில் கீழ்கண்ட பள்ளிகள் நடைபெறுகின்றன.

<u>14. சொந்த கட்டிடங்கள்</u>

1. கே.எம்.என். சகோதரர்கள் உயர்நிலைப்பள்ளி, சத்தியமூர்த்தி தெரு,
2. இராஜாஜி சாலை மேல்நிலைப்பள்ளி மற்றும் இராஜாஜி சாலை நடுநிலைப்பள்ளி
3. இலட்சுமிபுரம் நடுநிலைப்பள்ளி .இலட்சுமிபுரம்
4. பெரியகுப்பம் நடுநிலைப்பள்ளி பெரியகுப்பம்
5. என்.ஜி.ஜி.ஓ.காலனி நடுநிலைப்பள்ளி .என்.ஜி.ஜி.ஓ.காலனி
6. முகமது அலி தெரு ஆரம்பப்பள்ளி முகமதலி தெரு
7. கம்பர் தெரு ஆரம்பப்பள்ளி

**15. வாடகை கட்டிடத்தில் இயங்கும் பள்ளி**

வடக்குராஜ வீதி நடுநிலைப்பள்ளி வாடகை கட்டிடத்தில் நடைபெறுகிறது. மேலும் இதர பள்ளிகள் சொந்த கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றது. அனைத்து பள்ளிகளும் போதுமான வெளிச்சம் காற்றோட்டம் முதலியவைகளுடன் நன்றாக இயங்கி வருகிறது.

**16. துவக்கக் கல்வி நிதி**

அறிக்கையாண்டில் கல்வி நிதி கணக்கில் ரூ.8300263/– செலவிடப்பட்டது. சென்ற ஆண்டு செலவு ரூ.6626348/– ஆகும். 01.04.1990 முதல் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் கருவூலத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் கல்வி வரி மூலம் ரூ.61,54,165/–வருவாய் கிடைத்தது. சென்ற ஆண்டு வருவாய் ரூ.56,69,777/– ஆகும். அறிக்கையாண்டில் கல்வி நிதி கணக்கில் அரசின் மான்யம் பெறப்படவில்லை.

**17 to 21 அறிக்கையாண்டில் அரசிடமிருந்து பெற்ற வருவாய்கள்:–**

02.04.1990 முதல் நகராட்சி பள்ளிகள் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டது. எனவே ஆரம்பக்கல்வி சட்டம் செக்ஷன் 37ன் கீழ் வரவு ஏதும் இல்லை. இதனால் ஆரம்ப கல்வி கணக்கில் ஏற்படும் பற்றாக்குறை ஈடு செய்ய உதவித் தொகை ஏதும் பெறப்படவும் இல்லை.

நகராட்சி பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவ மாணவிகளுக்கும் மற்றும் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு 01.04.2019 முதல் 31.03.2020 வரை சென்ற ஆண்டைப் போலவே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் இந்நகராட்சியில் தொடர்ந்து நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

**22.சிறப்புப் பள்ளிகள் பொது நூல் நிலையங்கள்**

இந்நகர்மன்றத்தினரால் சிறப்பு பள்ளிகள் நூல் நிலையங்கள் ஏதும் நடத்தப்படவில்லை மாவட்ட நூலக குழுவினரால் ஒரு மாவட்ட அளவிலான பொது நூல் நிலையம் இந்நகரில் நடத்தப்பட்டு வருகிறது.

**23. ஆயுர்வேத மருத்துவமனை**

நகராட்சியால் நடத்தப்படும் ஆயுர்வேத மருத்துவமனை ஒன்று அறிக்கையாண்டில் பராமரிக்கப்பட்டு வந்தது. மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை ஒன்றும் இயங்கி வந்தது. நகராட்சி ஆயுர்வேத மருத்துவமனையில் ஒரு மருத்துவ அதிகாரியும் பணிபுரிந்து வருகிறார். இந்நகராட்சியில் ஆயுர்வேத மருத்துவம் பொதுமக்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக இருந்தது.

**24. நோயாளிகள்**

அறிக்கையாண்டில் நகராட்சி எல்லைக்குள் 13140 பேர்களும், வெளியூர்களிலிருந்து 610 பேர்களும் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றனர். மேற்படி மருத்துவமனை பராமரிக்க அறிக்கையாண்டில் செலவு ரூ.275940/– ஆகும். இதில் மருத்து செலவும் அடங்கும். ஒரு நபர் ஒன்றுக்கு சராசரி செலவு ரூ. 21/– ஆகும். கடந்த ஆண்டு செலவு ரூ. 24/– ஆகும்.

**25. இடவசதியும், கருவிகளும்**

ஆயுர்வேத மருத்துவமனை அரசினரின் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு தற்போது நகராட்சியின் சொந்த பராமரிப்பில் நடந்து வருகிறது. வசதி போதுமானதாக உள்ளது. சிப்பந்திகள் போதுமானதாக இருந்தனர். தளவாடங்கள் போதுமானதாக இருந்தன.

**26. தடுப்பு மருத்துவம்**

1) இந்நகராட்சியில் நகர்நல அலுவலர் பதவி அறிக்கையாண்டில் ஏதும் இல்லை. சுகாதார அலுவலர் பதவி உள்ளது. பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 360 பிறப்பு விகிதம் 6.1 % ஆகும். சென்ற ஆண்டு இறப்புகளின் விகிதம் 6–ல் இருந்து 1% ஆக உள்ளது. இறப்பு எண்ணிக்கை 553

2) நடப்பு ஆண்டில் தேசிய அளவில் நடத்தப்பட்ட போலியோ சொட்டு மருந்து முகாமில் 02.04.2018–ல் 8156 குழந்தைகளும் 24.02.2019–ல் 8295 குழந்தைகளுக்கு போலியோசொட்டுமருந்து வழங்கப்பட்டது.

3) அறிக்கையாண்டில் இரண்டு மகப்பேறு விடுதி தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தன. ஒரு மகப்பேறு மருத்துவமனை அரசினரின் மகப்பேறு மருத்துவ மேம்பாட்டு திட்டத்தின் மூலமாகவும், மற்றொன்று சொந்தமாக கட்டப்பட்டு தற்போது நகராட்சியின் சொந்த பராமரிப்பில் உள்ளது. 1 ஆயா பணியாற்றி வந்தனர். 3 மகப்பேறு ஆயா பணியிடம் நடப்பு ஆண்டில் காலியாக உள்ளது. ஒரு நல பார்வையாளர் பதவி அறிக்கையாண்டில் காலியாக உள்ளது.

4) மகப்பேறு விடுதிகளை மேற்சொன்ன ஊழியர்கள் கவனித்து வந்தனர். மருத்துவமனையில் பயிற்சிப் பெற்ற மகப்பேறு உதவியாளர்கள் உள்ளனர். மேற்படி பயிற்சிப் பெற்ற மகப்பேறு உதவியாளர்களால் பார்க்கப்பட்ட பிள்ளைபேறுகளின் எண்ணிக்கை 71 இதர பயிற்சிப் பெற்ற மகப்பேறு ஆயாக்களால் பார்க்கப்பட்ட பிள்ளைபேறுகள் ஏதுமில்லை.

5) அறிக்கையாண்டில் 865 தாய்மார்களுக்கு மகப்பேறு விடுதி உதவியாளர்களால் உதவி அளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 71 அறிக்கையாண்டில் தேர்ச்சிப் பெற்ற மகப்பேறு உதவியாளர்களால் பார்க்கப்பட்ட பிள்ளைபேறுகள் சதவிகிதம் 100 % சதவிகிதம் ஆகும்.

6) இவ்வாண்டில் குழந்தைகள் பிறப்பு சம்மந்தமாக கண்காணிப்பு முதல் இடை கடையாக மகப்பேறு உதவியாளர்கள் மேற்பார்வையில் கவனித்து வந்தனர்.

7) அறிக்கையாண்டில் டாக்டர்.முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவி திட்டம் தற்போது, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுபபுத் துறை பிரிவினரால் வழங்கப்பட்டு வருகிறது. தாய்மார்களுக்கும், ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் 71 தாய்மார்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டது.

**27.இறப்பு விகிதம், பரவும் நோய்கள் தொற்று நோய்கள் :**

அறிக்கையாண்டில் 218 இறப்புகள் பதிவு செய்யப்பட்டது. மக்கள் தொகையில் இறப்பு விகிதம் 0.38 % ஆகும்.

**28. நோய்களால் ஏற்படும் இறப்புகளின் விகிதம் :**

| வ.எண். | நோய்களின் விபரம் | இறப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பெரியம்மை | இல்லை |
| 2. | காய்ச்சல் | |
| 3. | டைப்பாயிடு | |
| 4. | வாந்தி பேதி | |
| 5. | சீதபேதி | |
| 6. | இதர காரணங்கள் | 218 |

நகரத்தில் வாந்திபேதி நோய் தடுப்பு பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன. குடிநீரில் குளோரின் கறைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் தொற்று நோய்களும், பரவும் நோய்களும் இவ்வாண்டில் இல்லை.

<u>பிளேக் :-</u> அறிக்கையாண்டில் நகரத்தில் பிளேக் நோய் இல்லை.

<u>29. துப்புரவு</u>

<u>அ) பொது சுகாதாரப் பணிகள் :-</u>

பொது சுகாதாரப் பணிகள் சரிவர நடைபெற ஆணையர் அவர்களால் நேரடி ஆய்வு செய்யப்பட்டது. துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளரால் நகரில் அவ்வப்போது ஒருங்கிணைந்த கூட்டு துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளப்பட்டு நகரை சுத்தமாகவும் சுகாதார முறையில் இருக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

<u>ஆ) சுகாதாரம் :-</u>

நகரின் தெருக்களில் விழும் குப்பைகளை துப்புரவு தொழிலாளர்களால் சுத்தம் செய்யப்பட்டு, டிப்பர் லாரி, LCV BOV மற்றும் இலது ரக வாகனம் மூலமாக அவைகளை 2 உரக்குடில் 17 பசுமை உரக்குடில் கொண்டுசெல்லப்பட்டன. உரம் தயார் செய்து பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பொது கழிப்பிடங்கள் ஐந்து நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. கட்டண கழிப்பிடங்கள் மூன்று. இந்நகரில் 6985 குடியிறுப்பு வீடுகள் இருந்தன. அனைத்து வீடுகளுக்கும் கழிப்பிட வசதி இருந்தன. புதியதாக கட்டும் வீடுகளுக்கும் கழிப்பிடம் கட்ட வற்புறுத்தப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் எடுப்பு மல அறைகள் ஏதும் இல்லை.

<u>இ. கலப்பு உரம் :-</u>

இந்நகராட்சி உரக்கிடங்கு திருவள்ளூர் தலைக்காஞ்சேரி சாலையில் அமைந்துள்ளது. இதன் மொத்த பரப்பளவு 1.67 ஏக்கர் ஆகும். அறிக்கை ஆண்டில் கலவை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. குப்பைகளை கொட்ட எதிர்கால தேவையை உத்தேசித்து மதுரா குன்னத்தூர் என்ற இடத்தில் 4.78 ஏக்கர் அளவில் புதிய உரக்கிடங்கிற்கு இடம் வாங்கப்பட்டுள்ளது. MCC – நுங்மம்பாக்கம் கட்டப்பட்டு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

<u>ஈ. உணவுப்பொருள் கலப்படத் தடுப்பு :-</u>

உணவு கலப்பட ஆய்வாளர் பணியிடம் இந்நகராட்சியில் இல்லை. தமிழக அரசால் உணவு பாதுகாப்புத்துறை துவங்கப்பட்டு உணவு பாதுகாப்பு அலுவலர் பணியிடம் தனித்துறையாக உருவாக்கப்பட்டு தற்போது நிறுவகிக்கப்பட்டு வருகிறது.

<u>உ. விழாக்களும் சந்தைகளும் :-</u>

நகரில் வாரச் சந்தை ஏதும் நடத்தப்படவில்லை. ஸ்ரீ வீரராகவ சுவாமி கோவில் சித்திரை, தை பிரம்மோற்சவங்கள் முறையே ஜனவரி, ஏப்ரல் மாதங்களில் வழக்கம் போல் நடைபெறுகிறது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் அண்டை மாவட்டங்களிலிருந்தும் 1,10,000–க்கும் மேற்பட்ட யாத்ரிகர்கள் வந்தனர். பொது சுகாதாரத்திற்கும், தனி சுகாதாரத்திற்கும் வசதிகள் செய்யப்பட்டது. திருத்தணி ஆடி கிருத்திகை உற்சவத்திற்கும் பிற மாவட்டங்களிலிருந்து செல்லும் யாத்ரிகர்கள் இங்கு வந்து செல்கின்றனர். விழாக்காலங்களில் நகரில் சிறப்புத் துப்புரவு பணிகள் செய்யப்பட்டது.

<u>30. தண்ணீர் விநியோகம் :-</u>

இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அபிவிருத்துத் திட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளது. தண்ணீர் கட்டணம் பின்வரும் விகிதத்தில் வசூலிக்கப்பட்டது. இந்த கட்டணம் 01.04.2001 முதல் திருத்தம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டுவருகிறது. மிகை குடிநீர் கட்டணமாக 1000 லிட்டர் ஒன்றுக்கு குடியிறுப்பு வீட்டிற்கு ரூ.5/–ம் தொழிற்சாலைகளுக்கு ரூ.10/– மற்றும் குடியிறுப்பு அல்லாத வியாபார நிறுவனங்களுக்கு ரூ.10/– வசூலிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அளவுமானி முறையில் (குடியிறுப்பு) (40,000 லிட்டர் வரை) மாதம் ஒன்றுக்கு | – | ரூ.100.00 |
| 2. | அளவுமானி முறையில் (குடியிறுப்பு அல்லாதது) தொழிற்சாலை | – | ரூ.200.00 |
| 3. | அளவுமானி முறையில் (குடியிறுப்பு அல்லாதது) உபயோகத்திற்கு<br>(40,000 லிட்டர் வரை) மாதம் ஒன்றுக்கு | – | ரூ.200.00 |

**31. சாக்கடை :-**

நகரில் முக்கிய வீதிகளில் திறந்த வெளி சாக்கடைகள் உள்ளன.

சாக்கடை இல்லாத தெருக்களில் கழிவுநீர் குழிகளில் சேர்ப்பித்து நகராட்சி கழிவுநீர் லாரியின் மூலமாக சாக்கடை நீர் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. கழிவுநீர் குழிகளில் சேர்ப்பதை தடுத்து சுகாதார முறையில் வைத்திருக்க பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம் III (TNUDP-III) கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போதைய நிலையில் இத்திட்டப்பணி சிப்பம் 1, 2, 4 (கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்) பணிகள் முடிக்கப்பட்டு 27.02.2016 முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சிப்பம் 3 பணிகள் முடிக்கப்பட்டு 27.12.2018 அன்று நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டம் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது சிப்பம் 1, 2 மற்றும் 3 பகுதிகளில் உள்ள கட்டடங்களுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**32. பொது நலமும், பாதுகாப்பும் :-**

அ. சுடுகாடு இடுகாடுகள் பராமரிக்கப்பட்டன.

ஆ. நகர சுத்தி தொழிலாளர்களுக்கு நகராட்சி மூலமாக வீடுகள்கட்டிக் கொடுக்கப்படவில்லை.

**33. பொது:**

அறிக்கையாண்டில் நவீன கட்டணக் கழிப்பிடங்கள் அனைத்தும் இலவச கழிப்பிடங்களாக மாற்றப்பட்டுள்ளது.

**34. போக்குவரத்து பேருந்துகள்**

இந்நகர்மன்றத்தால் போக்குவரத்துகள் அல்லது வண்டிபேட்டைகள் ஏதும் நடத்தப்படவில்லை. இந்நகரத்தில் ஓடும் பேருந்து வண்டிகள் தமிழ்நாடு அரசினராலும், தனிப்பட்டவர்களாலும் நடத்தப்பட்டு போதுமானதாக இருந்தன.

சந்தைக்கடை, பேருந்து நிலையம், ஆடடி சாலை மற்றும் கட்டணக் கழிப்பிடம், மரமகசூல் முதலியவைகள் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் நகராட்சிக்கு கிடைத்த வருவாய் கீழ்கண்டவாறு ஆகும்.

| வருடம் | சந்தைக் கடைகள் | பேருந்து கட்டணம் வசூல் | ஆடடி சாலை | மரமகசூல் | கட்டணம் கழிப்பிடம் |
|---|---|---|---|---|---|
| 2016–2017 | 262810 | 303130 | 104574 | –– | 37884 |
| 2017–2018 | 228750 | 303180 | 138650 | –– | 278900 |
| 2018–2019 | 290630 | 101364 | 124932 | –– | 292842 |
| 2019–2020 | 47,98,832 | 184080 | 195629 | –– | 352777 |
| 2020–2021 | 972395 | 41416 | 162824 | –– | 578480 |
| 2021–2022 | 2531620 | 133778 | 247370 | –– | 884607 |

**அ. தினசரி சந்தைகள்:**

பெரியகுப்பத்தில் ஜவஹர்லால் நேரு சாலையில் ஒரு தினசரி சந்தைக்கடை நகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் ரூ.2,93,616/– வருவாயாக கிடைத்தது. கடந்த ஆண்டு வருவாய் ரூ.162824/– ஆகும்.

**ஆ. பேருந்து நிலையம்:**

இந்நகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்படும் நிலையங்களில் பேருந்து நிலையமும் ஒன்று, மேற்படி பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்ய, 1998–99ம் ஆண்டில் பேருந்து நிலைய ஓடுதளம் ரூ.12.45 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது. இப்பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் பொது ஏலத்தில் விடப்பட்டு அதன்மூலம் அறிக்கை ஆண்டில் ரூ.25,31,620/– வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.. கடந்த ஆண்டு வருமானம் ரூ.43,76,282/– பெறப்பட்டுள்ளது.

<u>இ. ஆடடி சாலை:</u>

ஆடடி சாலை தொடர்ந்து நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவரால்,அறுக்கப்படும் ஆடுகள் ஆய்வு செய்யப்பட்டன. ஆடடி சாலையில் கட்டணம் தண்டும் உரிமையை ஏலம் விட்டதில் ரூ.2,47,370/– வருவாய் கிடைத்தது. கடந்த ஆண்டு ரூ.1,62,824/– ஆகும் தனிப்பட்டோருக்கு சொந்தமான ஆடடி சாலை ஏதுமில்லை.

<u>ஈ. மரமகசூல்:</u>

இந்நகராட்சி எல்லைக்குள் சாலையோர மரங்களில் உள்ள புளிய மரங்கள் மற்றும் நகராட்சி நீரேற்று நிலையத்திலுள்ள இலவம் பஞ்சுமரம், மாமரம் முதலியவைகளில் மகசூல் இல்லாதால் ஏலம் கேட்க யாரும் முன் வரவில்லை. கடந்த ஆண்டு வருமானமும், அறிக்கை ஆண்டு வருமானமும் ஏதுமில்லை.

<u>உ. தொழிற்சாலைகளும், இயந்திரங்களும்:</u>

இந்நகர்மன்ற எல்லைக்குள் உள்ள எல்லா தொழிற்சாலைகளும் மாவட்ட சுகாதார அதிகாரி அவர்களால் பார்வையிடப்பட்டது.

<u>35. மரம் நடுதலும், பூங்காக்களும் :</u>

அறிக்கையாண்டில் ஏற்கெனவே உள்ள மரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தன. இந்நகராட்சி 76 பூங்காக்கள் இருக்கின்றன. அறிக்கை ஆண்டில் செலவு ஏதுமில்லை

<u>36. நிலம் மேம்படுத்துதல்:</u>

நகரமைப்பு குழு தொடர்ந்து பணியாற்றி வந்தது. நகரமைப்பு திட்டப் பகுதிகளில் கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி கோரி வந்துள்ள மனுக்கள் அனைத்தும் முடிவு செய்யப்பட்டன. அறிக்கை ஆண்டில் தனிப்பட்ட நபர்களால் அனுமதி கோரி சமர்பிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்களின் பேரில் முடிவு செய்யப்பட்டது.

இந்நகராட்சியில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் அதிகமாக அமைந்துள்ளதாலும், 73 இடங்கள் உறுதிசெய்யப்பட்டு 73 இடங்களுக்குமேல் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடங்களை நகராட்சி ஆணையர் திருவள்ளூர் நகராட்சி அலுவலகம் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி இடம் தொடர்பாக கையகப்படுத்தப்பட்ட இடங்களுக்கு முள்வேலி அமைக்கவும், இந்நகராட்சியின் மூலம் இவ்விடம் இந்நகராட்சிக்கு சொந்தமான இடம் என தெரிவிக்கவும் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.1732 மற்றும் 1733, நாள்.09.06.2011–ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக Tamil Nadu Parks play – fields and open space 1959 சட்டத்தின்படி அரசிதழில் விளம்பரம் செய்ய முடிவு செய்யப்பட்டு 11.07.2011 அன்று தினத்தந்தி நாளிதழிலும், 12.07.2011 அன்று தினமணி நாளிதழிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

23.01.1961–ம் தேதிய உள்ளாட்சி துறையின் 178–ம் உத்திரவின்படியும் நகரமைப்புச் சட்டம் 12–வது பிரிவின்படியும் 7 விரிவான நகரமைப்புத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டது. எல்லாத் திட்டங்களும் அரசு அனுமதித்துள்ள கால தவணைக்குள்ளே ஒப்புதலுக்கு வைக்கப்பட்டன. நகரமைத்துத் திட்டத்தின் கீழ் வரும் கட்டிடம் கட்ட அனுமதி கோரி வரப்பெற்ற மனுக்களை மேற்படி சட்டம் 17–வது பிரிவின் படியும் முடிவு செய்யப்பட்ட திட்டங்களுக்கு முரணான கட்டிட மனுக்களை நகரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுவந்தன. விரிவான நகரமைப்பு திட்டங்களின் விவரம் கீழ்வருமாறு.

1. இராஜாஜிபுரம் நகரமைப்பு திட்டம் – 1
2. இராஜாஜிபுரம் நகரமைப்பு திட்டம் – 2
3. இராஜாஜிபுரம் நகரமைப்பு திட்டம் – 3
4. காந்திபுரம் நகரமைப்பு திட்டம் – 1
5. காந்திபுரம் நகரமைப்பு திட்டம் – 2
6. காந்திபுரம் நகரமைப்பு திட்டம் – 3
7. சிதம்பரம்நகர் நகரமைப்பு திட்டம் – 1

திருவள்ளூர் நகரத்திற்கு முழுமைத் திட்டம் மறு ஆய்வு செய்து அரசிடமிருந்து அரசாணை பெறப்பட்டுள்ளது. திருவள்ளூர் நகர் எல்லாப் பகுதிகளுக்கும் நில உபயோகத்தை குறித்து முழுமைத் திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசாணை எண்.353, வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித் துறை நாள்.03.11.2007. அறிக்கையாண்டில் ஒரு நகரமைப்பு ஆய்வர் மற்றும் 2 சங்கிலியாள்களும் பணியாற்றி வந்தனர்

<u>நிலுவையிலுள்ள கோப்புகள் விவரம் கீழ்வருமாறு :-</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு ஆரம்பத்தில் நிலுவை | – | 30 |
| 2. | அறிக்கையாண்டில் கண்டுபிடிக்கப்பட்டவை | – | 40 |
| 3. | முடிவு செய்யப்பட்டவை | – | 70 |
| 4. | உரிமையானை வழங்கப்பட்டவை | – | – |
| 5. | அப்புறப்படுத்தப்பட்டவை | – | 60 |
| 6. | 31.03.2015–ல் மொத்த நிலுவை | – | 10 |

**37. இதர பயனளிக்கும் முயற்சிகள் :-**

பாதாள சாக்கடை அமைத்தல், உரக்கிடங்கிற்கு புதிய இடம் வாங்குதல், கட்டண கழிப்பிடம், உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் ஆகிய இதர பயனளிக்கும் திட்டங்களுக்கு உரிய கருத்துருக்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் திருவள்ளூர் சி.வி.நாயுடு சாலை சந்திப்பில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்கப்பட்டது. மதுரா குண்ணத்தூர் நுங்கம்பாக்கம் கிராமத்தில் சர்வே எண்.160/2, 3, 4 எண்ணில் ரூபாய் 7.17 லட்சத்தில் 4.78 ஏக்கரில் புதிய உரக்கிடங்கிற்காக நிலம் வாங்கப்பட்டது. எம்.ஜி.எம். நகர், ஈக்காடு ரோடு, பத்மாவதி நகர் நுங்கம்பாக்கம் ஆகிய இடங்களில் MCC அமைக்க திட்டமிடப்பட்டு நுங்கம்பாக்கம் உரக்கிடங்கில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**38. பொது வருவாய்:**

<u>வருவாய் கணக்கு:–</u>

அறிக்கையாண்டில் வரிகள் மூலம் ரூ.631.55 லட்சம் வருவாய் வந்துள்ளது. கடந்த ஆண்டு ரூ.579.46 லட்சம் ஆகும். சிப்பந்திகளுக்கு செலவு ரூ.790.99 லட்சம் ஆகும்.

<u>வரிகள்</u>

1) அறிக்கையாண்டில் தண்டிய வரிகள் நகர மக்களின் ஜனத்தொகை நபர் ஒருவருக்கு சராசரி ரூ.1125/– ஆகும்.
2) கட்டிடங்கள் 12732 வரி மதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேற்படி வரிவிதிப்பு கட்டிடங்கள் மீது விதிக்கப்பட்ட வரிவிதிப்பு கட்டிடம் ஒன்றுக்கு சராசரி ரூ.348/– ஆகும். கடந்த ஆண்டு ரூ.320/– ஆகும்

39. அறிக்கையாண்டில் ரூ.192.69/– தொழில் வரியாக விதிக்கப்பட்டு ரூ.154.01/– வசூலிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் வரிவசூல் ரூ.136.54/– ஆகும். வரிகிதம் குறைந்தபட்சம் ரூ.243/– ஆகும்.

**40. கேட்பு வசூல் நிலுவை:**

அறிக்கையாண்டில் வரி இனங்களின் கீழ் நடப்பும் நிலுவையும் சேர்த்து கேட்பு ஆகும். வரி விலக்கு சட்டப்பிரிவு 83–ன் கீழ் குடிசைகளுக்கு வரிவிலக்கு அறிக்கையாண்டில் அனுமதிக்கப்படவில்லை. புதியதாக அறிக்கையாண்டில் வரிவிலக்கு அனுமதிக்கப்படவில்லை.

41. நிதி நிலவரம் :- <u>வங்கி இருப்பு</u>

| வ. எண். | வங்கியின் பெயர் | கணக்கு எண். | 01.04.2022–ன் ஆரம்ப இருப்பு |
|---|---|---|---|
| 1 | இந்தியன் வங்கி (Rev. Fund payment) | 414676682 | 33724 |
| 2 | இந்தியன் வங்கி (water supply) | 4146676671 | 548317 |
| 3 | இந்தியன் வங்கி Ele. Education | 414676637 | 1957273 |
| 4 | இந்தியன் வங்கி (Library cess) | 414676648 | 668988 |
| 5 | SBI - SFC | 4557 | 3739435 |
| 6 | இந்தியன் வங்கி (Rev. Fund deposit) | 414676229 | 3328944 |
| 7 | இந்தியன் வங்கி ( MLA. MP. Fund) | 414676241 | 10261 |
| 8 | TURIF - IDBI | 55356 | 33201 |
| 9 | SBM - ICICI | 15611000457 | 59,01,762 |
| 10 | இந்தியன் வங்கி (Rev. Fund Collection) | 414676659 | 2370361 |
| 11 | இந்தியன் வங்கி ( AMMA Unavagam) | 6342269914 | 157254 |

**பணம் கையிருப்பு :-**

மேற்படி விவரப்படி முன் இருப்புகள் எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளது. அதில் கீழ்கண்டவாறு இறுதி இருப்புகள் (சொத்துகள் (ம) கடன்கள்) காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 2020–2021–ம் ஆண்டின் மொத்த வருவாய் ரூ.1107,29,078/–. செலவு ரூ.168,8,70,533/–.

**42.முன் பணங்கள் :-**

இந்நகராட்சியில் முன்பண தலைப்பின் கீழ் நிலுவையிலுள்ள தொகைகள் அதிகமாக உள்ளது. இத்தொகைகளை பிடித்தம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**43.வைப்புத் தொகைகள் :-**

இந்நகராட்சியில் வைப்பு தொகை தலைப்பின் கீழ் நிலுவையாக உள்ள தொகையை நேர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**அ) தணிக்கை :-**

31.3.2022 வரையிலுள்ள காலத்தில் தணிக்கை தடைகள் 384 பத்திகள் நிலுவையாக உள்ளது. இந்த பத்திகளுக்கு பதில்கள் தயார் செய்து தணிக்கை தடைகள் கூட்டமர்வில் நீக்கம் செய்யப்பட உள்ளது.

**ஆ) வழக்குகள்:**

31.3.2022 வரையிலுள்ள மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற 8 வழக்குகள் நிலுவையாக உள்ளது. வழக்கினை விரைந்து முடிக்க நகராட்சி வழக்கறிஞரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**44 (1) பொது குறிப்புகள்:**

**1) நிர்வாகம் :-**

அலுவலகம் சொந்த கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

**2) பள்ளிக்கட்டிடங்கள் பழுதுபார்த்தல்**

துவக்க கல்வி நிதியில் பள்ளி கட்டிடங்கள் பழுது பார்த்தல் சம்மந்தமாக அறிக்கை ஆண்டில் ரூ.67.33 லட்சம் செலவிடப்பட்டது.

**3) பொது சுகாதாரம் :-**

இந்நகராட்சியில்56 பொது சுகாதார பணியாளர்களும் ஒரு துப்புரவு அலுவலர், 3 துப்புரவு ஆய்வர் 4 துப்புரவு மேற்பார்வையாளர்களும் மற்றும் ஒரு களப்பணி உதவியாளர், பணிபுரிந்துனர் வந்துள்ளனர். அறிக்கையாண்டில் கீழ் குறிப்பிட்டவர்கள் துப்புரவு அலுவலர் பணிபுரிந்து வந்தார்.

1. துப்புரவு அலுவலர்: திரு.P.முருகேசன், துப்புரவு அலுவலர், 21.09.2021

வரையிலும், திரு.R.K.கோவிந்தராஜூ, அறிக்கை ஆண்டு முடிய துப்புரவு அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.

சுகாதார பணிகள் மற்றும் துப்புரவு பணிகள் திருப்திகரமாக செயல்பட்டு வந்தது. யானைக்கால் நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கப்பட்டு கொசு தடுப்பு முறை நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. மேலும் டெங்கு காயச்சல் குறித்து தடுப்பு நடவடிக்கைகள் குழுக்கள் மூலம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

மகப்பேறு உதவியாளர்கள் நகரில் மருத்துவ மனைக்கு செல்ல இயலாத எல்லா பகுதியிலும் பிரசவிக்கும் தாய்மார்களை அடிக்கடி பார்த்து தேவையான உதவிக்குப்பின் பிறப்புக்களையும் கவனித்து வந்தார்கள். பிறப்பு. இறப்பு சரியாக பதிவு செய்து முறைப்படி நடத்தி வரப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் நகரில் அம்மை தொற்று நோய் ஏதுமில்லை. சிசு மரணம் ஏற்படுவதை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டயோரியா ஏற்படாமல் தடுக்க பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதுடன் போதிய மருத்துவ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

4. <u>குடும்ப நலத்திட்டம் :-</u>

அறிக்கையாண்டில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் குறியீடு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

<u>5. தெருவிளக்குகள் :-</u>

நகர் முழுவதும் 3581 விளக்குள் பொருத்தப்பட்டுள்ளது. இவ்விளக்குகள் அப்போதைக்கப்போது நகராட்சி பொறியாளர் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் பார்வையிட்டு அறிக்கை பெற்ற மின் இலாக்காவின் மூலம் மின் துண்டிப்பினைப் பெற்று உடனுக்குடன் தெருவிளக்கு பழுதுகளை சரிசெய்யப்பட்டு வருகிறது.

<u>6.ஆரம்பக் கல்வி :</u>

01.04.1990 முதல் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் அரசு கருவூலத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

<u>7. நீரளிப்பு :–</u>

திருவள்ளூர் நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1939 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான குடிநீர் நகரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள கூவம்

ஆற்றிலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்த திட்டம் 1941–ம் ஆண்டின் நகர மக்கள் தொகை 12700–க்கு கணக்கிடப்பட்டு தயாரிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான தலைமை நீர் இறைப்பு நிலையம் கூவம் ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டது. குடிநீர் கூவம் ஆற்றில் நீர் உறிஞ்சு கிணற்றிலிருந்து நீர் இறைப்புக் கிணற்றிற்கு சுமார் 75 மீட்டர் நீளத்திற்கு 6" விட்டமுள்ள இரும்பு குழாய்கள் மூலம் இறைக்கப்பட்டு நகரில் உள்ள உயர்மட்ட தொட்டிக்கு ஏற்றப்பட்டு அங்கிருந்து நகரின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 75 பொதுக் குழாய்கள் மூலம் வழங்கப்பட்டது.

நாளடைவில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டதின் காரணமாகவும், பற்றாக்குறை காரணமாகவும் திருவள்ளூர் நகருக்கு அபிவிருத்தி திட்டம் அனுமதித்திட அரசினைக் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க, தமிழக அரசினால் 1974–ம் ஆண்டில் சுமார் 18.00 லட்சம் செலவில் நகரிலிருந்து சுமார் 14 கி.மீ. தொலைவில் உள்ள (வடக்கு பகுதியில்) "கொசஸ்தலை" ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரப்பட்டது. இந்த பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்து முடிக்கப்பட்டு நகராட்சிக்கு1974–ம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் குசஸ்தலை ஆற்றிலிருந்து சுமார்4 கி.மீ. தூரத்தில் உள்ள பட்டரைபெரும்புதூர் எனும் இடத்தில் கிணறு ஒன்று (15–0 விட்டத்தில்) அமைக்கப்பட்டு இந்த இரு இடங்களிலிருந்தும் மின் விசை இயந்திரங்கள் மூலம் குடிநீர் நகருக்கு கொண்டு வரப்பட்டு உயர்மட்ட தொட்டிகளில்

நிரப்பப்பட்டு ராஜம்பா தேவி பூங்கா என்னுமிடத்தில் 5 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்டதும், மற்றொன்று பெரியகுப்பம் பகுதியில் நகராட்சிப் பள்ளி அருகே 1 லட்சம் லிட்டர் கொள்ளவும் கொண்டதுமாக கட்டி முடிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவந்தது.

இத்திட்டத்தின் மூலமாக நகரின் முக்கிய பகுதிகளில் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு பொதுக்குழாய்கள் மூலமும், குடிநீர் குழாய் வீட்டிணைப்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. இது நீங்கலாக 1972–73–ம் ஆண்டுகளில் நகரின் முக்கிய பகுதிகளில் அதாவது சி.வி.நாயுடு சாலை மற்றும் போலீஸ் லைன் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு, இவற்றில் நீர் மூழ்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டு குடிநீர் இறைக்கப்பட்டு நேரிடையாக பகிர்மான குழாய்களில் செலுத்தப்பட்டு பற்றாக்குறையை சமாளிக்கப்பட்டதுடன் அதிக நீர் அழுத்தம் கிடைக்கச் செய்யும் வழிவகை செய்யப்பட்டது.

தொடர்ந்து பருவ மழை பொழிய தவறியதின் காரணமாகவும் ஆற்றில் நீர் ஓட்டம் குறைந்து விட்டதின் காரணமாகவும் இரண்டு ஆற்றுப்படுகையிலிருந்தும் நீர் இறைக்கும் பணி 1980–ம் ஆண்டு முதல் தடைப்பட்டது. இதனை ஈடுகட்டும் வகையில் நகரின் குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்க்கும் வகையிலும் நீர் வளமுள்ள முக்கிய 21 இடங்களில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு அதனின்றும் நீர் மூழ்கி மோட்டார் இயந்திரங்கள் மூலம் குடிநீர் இரைக்கப்பட்டு உயர்மட்ட தொட்டிகளில் நீர் நிரப்பப்பட்டும் பகிர்மான குழாய்களில் நேரிடையாக இணைக்கப்பட்டும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆழ்துளை கிணறுகள் 5 முதல் 20 குதிரை ஆற்றல் சக்தி கொண்ட நீர்மூழ்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

<u>பொன்விழா ஆண்டு கூட்டுக் குடிநீர் திட்டம்</u>

திருவள்ளூர் நகராட்சியில் பொன்விழா ஆண்டு குடிநீர் மேம்பாட்டு திட்டம் 2000–2001ன் கீழ் ரூ.11 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு 7 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் நகராட்சி வசம் 25.08.2005–ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் வெள்ளியூர் பகுதியில் பாதாள நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் கொண்டு வரப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள பகுதியில் 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி 7 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

1. இராஜம்மா தேவி பூங்கா
2. கே.ஜி.பி. நகர்
3. NGO காலனி
4. ராஜாஜிபுரம் குமணன் தெரு
5. புங்கத்துார்
6. ஈக்காடு ரோடு (நகராட்சி புல் பண்ணை)
7. பெரியகுப்பம்

இதில் 7 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் நகராட்சியின் மூலம் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றது. பொது மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 88.00 லிட்டர் குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது/

<u>8. நகரமைப்பு திட்டங்கள்:</u>

ஏழு நகரமைப்பு திட்டங்கள் அரசினருக்கு அனுப்பியதில் கீழ்கண்ட 7 திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | இராஜாஜிபுரம் நகரமைப்பு திட்டப் பகுதி | – | I, II, III |
| 2. | காந்திபுரம் நகரமைப்பு திட்டப் பகுதி | – | I, II, III |
| 3. | சிதம்பரம் நகரமைப்பு திட்டப் பகுதி | – | I |

<u>சிறப்புக் குறிப்புகள்:</u>

1) 2012–2013–ம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்டமும் 2013–2014–ம் ஆண்டு உத்தேச வரவுசெலவு திட்டமும் சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது.

2) அறிக்கையாண்டில் குடும்ப நல திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டது. நகராட்சி மகப்பேறு சிப்பந்திகள் ஒவ்வொருவரும் தகுதி வாய்ந்த பெற்றோர்களை அணுகி குடும்ப நலத்திட்டத்தினை அவர்களுக்கு சிறந்த முறையில் விளக்கம் கொடுத்து எவ்வித நிர்பந்தமும் இல்லாமல் அவர்களாக விரும்பி அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களில் எவருக்கும் இதனால் உடல் நலக்குறைவு ஏற்பட்டதாகவோ, துன்பம் ஏற்பட்டதாகவோ புகார்கள் ஏதுமில்லையென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

9) புரட்சித் தலைவர் எம்..ஜி.ஆர். சத்துணவு திட்டம் (5 முதல் 14 வயது வரை )

01.07.1982 முதல் கல்வித் துறை பராமப்பில் இருந்து வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 14 வயது வரையுள்ள மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்க அரசு ஆணை எண். 1422 ஊர்வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 07.08.82 உத்திரவுப்படி இந்நகராட்சியின் பராமரிப்பிற்கு 15.8.82ல் மாற்றப்பட்டது. அறிக்கையாண்டில் காய்கறி, மளிகை, விறகு ஆகியவற்றிற்கு செலவிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு ரூ.193176/–

இந்நகர எல்லைக்குள் நகராட்சிக்கு சொந்தமான 8 பள்ளிகளில் சத்துணவு வழங்கும் பணி நகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. பள்ளியின் சத்துணவு மையங்களை பராமரிக்க எட்டு சத்துணவு அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களை தவிர்த்து சமையல் பணிகளை மேற்கொள்ள எட்டு சமையர்களையும் சமையலர் உதவியாளர்களாக எட்டு பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பணியமைப்பு பணிகளை மேற்கொள்ள இதற்காக அலுவலகத்தில் ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் பதவியில் சத்துணவு திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளார். அறிக்கையாண்டில் இவர்களுக்காக ஊதியங்கள் மற்றும் மதிப்பூதியங்கள் வழங்கப்பட்ட விதத்தில் மொத்தம் ரூ.2653902 அறிக்கையாண்டில் செலவிடப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் 1097 பள்ளி சிறுவர் சிறுமியர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, செலவினத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்பணம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

திட்டப்பணிகள்

| வ.எண் | பணியின்விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) | | |
| 1 | பெரியகுப்பம் ஜெ.என்.ரோடு பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார்மையம் கட்டிடம் அமைக்கும் பணி | 197.00 |
| 15 வது நிதிக்குழு மான்யம் 2021–22 – Tied Grant | | |
| 2 | பாதாள சாக்கடை திட்ட செயலாக்கத்திற்கு தேவையான 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவுநீர் உறிஞ்சும் மற்றும் அடைப்புகளை நீக்கும் ஜெட்ராடிங் மிஷின் வாங்குதல் பணி | 49.00 |
| 3 | வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழுதடைந்துள்ள பிராதான குழாய் மாற்றி புதியதாக 500mm DI குழாய் அமைக்கும் பணி | 17.00 |
| 4 | வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு 100 குதிரை திறன் கொண்ட Turbine Motor and starter -1 வாங்குதல் பணி | 10.00 |
| 5 | வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணறு எண்.4–ல் இணைக்க பிரதான குழாய் அமைக்கும் பணி. | 15.00 |
| 6 | ஜெயாநகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் இராஜம்மாள் தேவி பூங்கா நீர் உந்து நிலையம் ஆகிய பிரதான குழாய்களில் 100mm மற்றும் | 1.00 |

| | | |
|---|---|---|
| | 150mm Valve பொருத்தும் பணி. | |
| 15 வது நிதிக்குழு மான்யம் 2021–22 **Untied Grant** | | |
| 7 | நகராட்சி அலுவலக வளாகம் பின்புறம் மின்கலத்தில் இயங்கும் வாகனத்திற்கு (BOV) மேற்கூரை அமைக்கு பணி | 10.00 |
| 8 | நகராட்சி அலுவலக வளாகம் பின்புறம் உள்ள பாதாளசக்கடை கழிவு நீரேற்று நிலையத்திற்கு 60 HP Non Clog type Sewerage submersible Motor கொள்முதல் செய்யும் பணி | 14.00 |
| 9 | பத்மாவதி நகர் பகுதியில் உள்ள பாதாளசக்கடை கழிவு நீரேற்று நிலையத்திற்கு 25 HP Non Clog type Sewerage submersible Motor கொள்முதல் செய்யும் பணி | 9.00 |
| 10 | வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு 0.415 KV LT பிரதான panel Boards சப்ளை செய்து பொருத்தும் பணி | 5.00 |
| 11 | தெரு விளக்கு இல்லாத பகுதியில் புதிய LED தெரு விளக்கு 292 எண்ணிக்கை பொருத்தும் பணி | 24.00 |
| 15 வது நிதிக்குழு சிறப்பு மான்யம் – தேசிய சுகாதார பணி | | |
| 12 | நகர்புற சுகாதார நல மையம் (UHWC) கட்டும் பணி | 25.00 |
| இயக்குதல் (ம) பராமரித்தல் | | |
| 13 | வார்டு எண்.26 பெரியகுப்பம் பேருந்து நிலையம் அருகில் உள்ள பொது கழிப்பிடம் பழுதுபார்க்கும் பணி | 4.30 |
| 14 | வார்டு எண்.3 எடப்பாளையம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் பழுதுபார்க்கும் பணி | 4.00 |
| 15 | வார்டு எண்.5 ஈக்காடு பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் பழுதுபார்க்கும் பணி | 4.00 |
| மூலதன மான்ய நிதி | | |
| 16 | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்பாடு செய்தல் பணி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கழிவுநீர் குழாய் அமைத்து கூவம் ஆற்று பகுதியில் புட்லூர் தடுப்பணைவரை குழாய் அமைக்கும் பணி | 953.84 |

2021–22 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பணிகள் விபரம்

| வ.எண் | பணியின்விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| அரசு தன்னிறைவு திட்டம் | | |
| 1 | வார்டு எண்.22 சிவா விஷ்ணு கோயில் தெரு தார்சாலை அமைத்தல் பணி | 28.50 |
| சிறப்பு சாலை திட்டம் 2020–21 | | |
| 2 | வி.எம் நகர் (இணைப்பு) (கனகவள்ளிதெரு), KKR **நகர் காந்தி நகர் மெயின் ரோடு, செம்பருத்தி சாலை** தார்சாலை அமைத்தல் பணி (சிப்பம் 2) | 150.00 |
| 3 | புங்கத்தூர் ரோடு, என்.ஜி.ஓ. காலனி (வேளாண்மை துறைஅலுவலகசாலை) வி.எம் நகர் மெயின்ரோடு முதல் ஐ.ஓ.பி காலனி இணைப்பு சாலை, ஐவேலி அகரம் தெரு தார்சாலை அமைத்தல் பணி (சிப்பம் 3) | 150.00 |
| தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020–21 (Phase - II) | | |
| 4 | திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட சண்முகா நகர் மெயின் ரோடு தாலுக்கா காவல் நிலையம் அருகில், டோல்கேட் காலனி மெயின் ரோடு, ஐ.சி.எம்.ஆர் மெயின் ரோடு, புங்கத்தூர் ஏ.எஸ்.பி நகர் மெயின் ரோடு, அய்யனார் அவென்யூ அனெக்ஸ் குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல், வார்டு எண். 1, 1, 1, 19, | 160.00 |

| | | |
|---|---|---|
| | 21 | |
| 5 | திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட அய்யனார் அவென்யூ மெயின் ரோடு, தந்தை பெரியார் குறுக்கு தெரு, கவி காலமேகம் தெரு தார் சாலை அமைத்தல். வார்டு எண். 21, 22, 22 | 173.00 |
| 6 | திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட வள்ளலார் தெரு, எஸ்.வி.கோவில் தெரு, குட்டைக்கரை தெரு, மு.வ.தெரு தார் சாலை அமைத்தல். வார்டு எண். 26, 25, 26, 22 | 119.00 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி 2020–22 | | |
| 7 | திருவள்ளூர் நகராட்சியில் 1 முதல் 15வது வார்டுகளில் LED தெரு மின்விளக்குகள் அமைத்ததல் | 8.00 |
| 8 | திருவள்ளூர் நகராட்சியில் 16 முதல் 27வது வார்டுகளில் LED தெரு மின்விளக்குகள் அமைத்ததல் | 8.50 |
| பொது நிதி | | |
| 9 | வார்டு எண்.22–ல் உள்ள அன்னை இந்திரா காந்தி பிரதான சாலைக்கு தார் தளம் அமைக்கும் பணி | 7.00 |
| 10 | வார்டு எண்.22–ல் உள்ள அன்னை இந்திரா காந்தி பிரதான சாலைக்கு (கிழக்கு முதல் மேற்கு வரை) தார் தளம் அமைக்கும் பணி | 9.00 |
| 11 | வார்டு எண் 2 பெரும்பாக்கம் காலனி சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 8.90 |
| 12 | வார்டு எண்.1 உள்ள டோல்கேட் சுடுகாடு வடக்கு பகுதியில் GI Sheet மேற்கூரை அமைக்கும் பணி | 10.00 |
| 13 | வார்டு எண் 2 பெரும்பாக்கம் காலனி சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 5.50 |
| 14 | வார்டு எண்.22 சோழன் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் குடிநீர் குழாய் அமைக்கும் பணி | 3.00 |
| 15 | வார்டு எண்.22 ஸ்ரீ நிகிதேன் பள்ளி தெருவில் தார் தளம் அமைக்கும் பணி | 10.00 |
| 16 | நகராட்சி அலுவலக கட்டத்தில் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணி | 3.00 |
| 17 | பெரியகுப்பம் மகப்பேறு மருத்துவமனை கட்டிடம் பழுது பார்க்கும் பணி | 2.00 |
| 18 | வார்டு எண்.1 உள்ள டோல்கேட் சுடுகாடு கிழக்கு பகுதியில் GI Sheet மேற்கூரை அமைக்கும் பணி | 10.00 |
| 19 | என்.ஜி.ஓ காலனி, லட்சுமிபுரம், ராஜாஜி சாலை, சத்தியமூர்த்தி தெரு சத்துணவு மையம் பழுது பார்க்கும் பணி | 5.00 |
| 20 | நகர்புற வாழ்வாதார மைய கட்டிடத்தில் வரி வசூல் மையம் அமைத்தல் | 2.00 |
| 21 | நகர்புற வாழ்வாதார மைய கட்டிடத்தில் E - Siva மையம் அமைத்தல் | 2.00 |
| 22 | BOV பழுது நீக்கம் செய்யும் பணி | 9.00 |
| 23 | BOV பழுது நீக்கம் செய்யும் பணி | 9.00 |
| 24 | பத்மாவதி நகர் கழிவு நீரேற்று நிலையத்தில் 300mm வால்வு, 20 Hp (ம) 25 Hp மின் மோட்டார் பழுது நீக்கம் | 5.00 |
| 25 | மின் மோட்டார் கொள்முதல் செய்யும் பணி | 10.00 |
| 26 | நகராட்சி கழிவு நீரேற்று நிலையத்தில் 300mm வால்வு, 40 Hp (ம) 60 Hp மின் மோட்டார் பழுது நீக்கம் | 10.00 |
| 27 | பாதாளசாக்கடை Manhole சாலை மட்டத்திற்கு உயர்த்தும் பணி | 6.70 |
| 28 | வார்டு எண் 1 முதல் 27 வார்டு வரை புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணி | 9.00 |
| 29 | வார்டு எண் 27 பெரியகுப்பம் ஆற்றுக்கரை ஓரம் ஆழ்துளை கிணறு அமைத்து Sintex தொட்டி அமைக்கும் பணி | 4.00 |
| 30 | வார்டு எண் 23 பெரியகுப்பம் மேட்டுத் தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்து Sintex தொட்டி அமைக்கும் பணி | 4.00 |
| 31 | வார்டு எண் 27 ஒண்டிக்குப்பம் ஆற்றுக்கரை ஓரம் ஆழ்துளை கிணறு அமைத்து Sintex தொட்டி அமைக்கும் பணி | 8.00 |

<u>பொதுக்குறிப்புரை:</u>

அறிக்கையாண்டில் நிர்வாகம் நல்ல முறையில் நடத்த தொகுதி பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், நகராட்சி பொறியாளர், வெவ்வேறு துறையைச் சேர்ந்த அலுவலர்கள், துறை தலைவர்கள் அகம் மற்றும் புறமுக அலுவலகப் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் யாவரும் ஒத்துழைப்பு நல்கினர்.

ஆணையர் (பி)
திருவள்ளூர் நகராட்சி
29/4/2022